அலகு 7

# அறவியலின் இயல்பும் அறச்செயல்களும்

PZU8VB

## கற்றல் நோக்கங்கள்

- அறவியலின் வரையறையை அறிதல்
- ஒழுக்கத்திற்கான அடிப்படை விதிகளைத் தெரிந்துகொள்ளுதல்
- அறச்செயல்களின் பண்புகளைப் புரிந்துகொள்ளுதல்
- அறவியலைப் பிற சமூக அறிவியியல் துறைகளோடு ஒப்பிட்டு அறிதல்
- மாணவர்களின் அறச்சிந்தனையை வளர்த்தல்

### நுழைவு வாயில்

பொதுவாகக் குணம் நாடிக் குற்றமும் நாடிச் செய்யத் தகுந்ததும் செய்யத் தகாததுமான செயல்களை இனங்கண்டு ஏற்பதும் விலக்குவதும் அறமாகக் கருதப்படுகிறது. மனித நடத்தையை அளப்பதற்குச் சமன்செய்து சீர்தூக்கும் கோலாகப் பயன்படுவதுடன், மக்கட்பண்பையும் அறிவுத்திறனையும் இணைப்பதற்கும் அறம் உந்துவிசையாகிறது. பொருளும் இன்பமும் மட்டுமல்ல; அறிவும் அறத்தாலேயே வரவேண்டும். அப்போதுதான் மக்களின் பண்புநலன்களும் குன்றின் மேலிட்ட விளக்காகும். இத்தகைய அறம் அனைத்து வகை உயிர்களுக்கும் இன்றியமையாததாகும். இதுவும் அன்பையே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்கிறார் வள்ளுவர்.

*"என்பில் அதனை வெயில்போலக் காயுமே*
*அன்பில் அதனை அறம்"* (குறள்: 77)

எலும்பில்லாத புழுவை வெயில் உறுத்துவது போல அன்பில்லாத உயிர்களை அறம் உறுத்தும் என்கிறார். இந்த உறுத்தலுணர்வைத் தவிர்க்கவேண்டுமானால் மனத்துக்கண் மாசிலாத அறநிலைக்கு மனிதன் உயரவேண்டும் என்பதும் அவர் கருத்தாகும்.

### அறவியல் சொல் விளக்கம்

அறவியல் என்பது ஆங்கிலத்தில் 'Ethics' அல்லது 'Moral Philosophy' என அழைக்கப்படுகிறது. 'Ethics' என்ற சொல், 'Ethos' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். 'Ethos' என்ற சொல்லிற்கு 'வழக்கம்' என்பது பொருள். 'Moral' என்ற சொல், 'Mores' என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இச்சொல்லிற்கு, மரபு என்று பொருள். எனவே, அறவியல் என்பது, மக்கள் தொன்று தொட்டுத் தமது வாழ்க்கையில் பயன்படுத்திய சில வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றியது என்பதை அறிய முடிகிறது.

### அறவியல் வரையறை

அறவியல் என்பது, மனிதச்செயல்கள் மற்றும் நடத்தையின் தரத்தைப் பற்றியதாகும். மக்கள் அன்றாட வாழ்க்கையில் உரையாடும்போது ஒருவன் நல்லவன், ஒருவன் தீயவன் என்றும், ஒருவன் செய்தது மிகவும் சரிதான் என்றும், ஒருவன் இப்படிச் செய்திருக்கக்கூடாது என்றும் வேறுபட்ட கருத்துகளைக் கூறுகின்றனர். இவ்வாறு கூறும்போது மனிதச் செயல்கள் பற்றி, ஒவ்வொரு மனிதனுக்கும் கருத்துகள் இருப்பதை அறிகிறோம். இக்கருத்துகள் ஒரு பொது அறவரையறைக்குள் கொண்டுவரப்பட்டு விளக்கப்படுவதையே



Unit 7 Rev.indd 122 13-02-2020 20:30:31

அறவியல் என்கிறோம். மனிதனது குறிக்கோள் பற்றியும், அக்குறிக்கோளின் அடிப்படையில் அவனது செயல்கள் மற்றும் நடத்தைகள் அமையவேண்டியதுபற்றியும்அறவியல்பேசுகிறது. அது தனிமனித நடத்தைகள் அனைத்தும் உயரிய பண்புநலன்களின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

தனிமனித வாழ்க்கையுடன் சமூக வாழ்க்கையையும் அறவியல் வரையறை செய்துள்ளது. நமது சமூகத்தில் கணவன் – மனைவி, பெற்றோர் – பிள்ளைகள், ஆசிரியர் – மாணவர் எனப் பல்வேறு நிலைகளில் மனிதர்கள் இணைந்து வாழ்கிறார்கள். இப்படி வாழும்போது அவர்களுக்குரிய கடமைகளைச் சில ஒழுங்குமுறைகளுடன், சமூக விதிகளுக்கு உட்பட்டுச் செய்திருக்கிறார்களா என்றும், அவர்களின் நடத்தை சரியா? தவறா? என்றும் அறவியல் ஆராய்கிறது.

## அறிஞர்களின் கருத்துகள்

**சின்ஹா** - 'அகநிலை அறப்பண்பு மற்றும் நடத்தை பற்றிய அறிவியல்'

**மெக்கன்ஸி** - 'மனித நடத்தையில் எது சரியானது அல்லது எது தவறானது, எது நன்மையானது அல்லது எது தீமையானது, என்பது பற்றிய படிப்பு'

**அரிஸ்டாட்டில்** - 'அறவியல் என்பது, நன்னடத்தை மூலமாக நற்செயல்களை உரிய நேரத்தில் செய்வித்து மனிதனை நல்வழிப்படுத்துவதுதான்'.

**பாட்டர் ஸ்டிவர்ட்** - எதைச் செய்வதற்கு உனக்கு உரிமையுள்ளது என்பதற்கும், எந்தச் செயல் செய்வதற்குரியது என்பதற்குமான வேறுபாட்டை அறிவது அறவியலாகும்.

**இமானுவேல் கான்ட்** - ஒரு மனிதன் பிறர் உரிமைகளில் தலையிடுவது என்பது சட்டப்படி குற்றமாகும். ஆனால், பிறர் உரிமைகளில் தலையிட நினைப்பதே அறவியல்படி குற்றமாகும்.

**ஆல்பர்ட் சுவைட்சர்** - மனச்செம்மையை அடைவதற்குரிய ஆளுமைமிக்க மனிதச் செயல்பாடே அறவியலாகும்.

**வின்டன் மார்கலிஸ்** – சட்டங்களைவிட அறங்களே மேலானவை.

**ஔவையார்** - செல்வமுள்ளபோது வறியோருக்கு வழங்கியும், செல்வமில்லாதபோது உள்ளதை உடனுண்டும் வாழ்வது மானுட அறமாகும். (புறம் :95)

**புத்தர்** - செயலே வாழ்வாகும்; செயலின்றி வாழ்வில்லை; பிறருக்குத் தீங்கு தரும் செயல்களைத் தவிர்க்கவேண்டும்; அனைவருக்கும் நன்மையளிக்கும் செயல்களையே செய்யவேண்டும்.

**வள்ளுவர்** – மனித வாழ்வின் உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பர். இவற்றுள் வீடுபேற்றைத் தனியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. முதலில் மனிதன் அறவழியில் நிற்கவேண்டும் என்றும், அந்த அறத்தின் அடிப்படையில் பொருளீட்ட வேண்டும் என்றும், அறவழியில் ஈட்டிய நற்பொருள் மூலமே இன்பம் நுகரவேண்டும் என்றும் கூறுகின்றார்.


## அறவியலின் இயல்பும் பணியும் (Nature of Ethics)

அன்றாட வாழ்க்கையில் மனிதர்களின் நடத்தைகள் மற்றும் செயல்களை மதிப்பிட்டு, அவை சரியா? தவறா? என்று கூறுவதே அறவியலின் இயல்பாகும். பொதுவாகத் தனி மனிதர்களின்

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> **அறமும் சட்டமும்**
>
> "அறம் தனிமனிதப் பண்பினை உயர்த்தும் வகையில் சமுதாய இன்பத்தை வளர்க்கிறது. சட்டம் சமுதாய நலனைக் காக்கும் வகையில் தனிமனிதனின் நடத்தையை ஒழுங்குறச் செய்கிறது. "நன்மையைச் செய்ய வேண்டும்" என்று அறம் கூறுகிறது. "தீமையைச் செய்யாதே" என்று சட்டம் தடுக்கிறது. அறம் காரணங்காட்டி மக்களை நல்வழிப்படுத்துகிறது. சட்டம் கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது. சட்டம் அச்சுறுத்துகிறது. மக்களின் சிந்தனையை உயர்த்துகிறது. அறம், செயல்களைத் திருத்துகிறது சட்டம். மக்கள் மனதிலே இயல்பாயெழுவது அறம். மக்களால் இயற்றப்பெறுவது சட்டவிதி. அறம் மாறாத நெறியினைக் கொண்டது. சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

நடத்தைகள், மரபுகள் அல்லது அறநெறிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து உரிய தீர்வுகளை வழங்குவதே அறவியலின் பணியாகும்.

## அறவியல் ஓர் அறிவியல் (Ethics as a Science)




## அறிவியல்

ஒரு குறிப்பிட்ட பொருளையோ அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ எடுத்துக்காட்டி விளக்கம் கேட்க முற்பட்டால், அதனோடு இணைந்த எல்லாச் செய்திகளையும், ஒருவகை ஒழுங்கமைப்பினுள் தருகின்ற அறிவே அறிவியல் ஆகும் (Science is an organized or systematized knowledge). இவ்வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நெறிமுறைகளின் தொகுப்பான அறவியலும் ஓர் அறிவியலே எனலாம்.

## அறிவியல் முறை

ஒருவகை ஒழுங்கமைப்பினுள் வேண்டாத செய்திகளை நீக்கி, வேண்டிய செய்திகள் எல்லாவற்றையும் முறையாக இணைத்துத் தருவது அறிவியலின் முறையாகும். ஓர் இலையைக் கொடுத்தால், அறிவுடையவன், அந்த இலையைப் பற்றிய எளிய சில செய்திகளை மட்டுமே கூறமுடியும். ஆனால், தாவரவியல் அறிஞனோ, அந்த இலையைப் பற்றிய முழுமையான செய்திகளை ஓர் ஒழுங்கமைப்பினுள் அமைத்துத் தந்துவிடுவான். அவ்வாறே அறவியலும், மனிதனுடைய எந்தச் செயலையும் விளக்க முற்படும்போது, அச்செயலைச் சரி தவறு, நன்மை தீமை, என்ற அடிப்படை ஒழுங்கமைப்பினுள் அதை அமைத்துக்காட்டும். எனவே, அறவியலும் அறிவியல் நோக்குடையதே ஆகும்.

## அறவியல்: ஓர் உயர்நிலை அறிவியல்

சில செயல்கள் ஏன் இப்படிச் செய்யப்பட வேண்டும் என்பதற்கோ விடைகளைக் காண, உயர்நிலை அறிவியல் அல்லது மேல்நிலை அறிவியல் தேவைப்படுகிறது. அளவையியல் (Logic), அழகியல் (Aesthetics), அறவியல் (Ethics) என்ற இம்மூன்றும் உயர்நிலை அறிவியலைச் சேர்ந்தவை.

நல்ல சிந்தனை எப்படி இருக்கவேண்டும் என அளவையியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல அழகு எப்படி இருக்கவேண்டும் என அழகியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல நடத்தை எப்படி இருக்கவேண்டும் என விளக்க முற்படுவது அறவியலின் அடிப்படையாகும்.

தனிமனிதனின் செயல் அல்லது நடத்தை என்பதை எடுத்துக்கொண்டால், சமூகவியல் (Sociology) அறிஞர்களும், மானிடவியல் (Anthropology) அறிஞர்களும், உளவியல் (Psychology) அறிஞர்களும் மனித நடத்தைகளைப் பற்றியே ஆராய்கின்றனர். எனவே, சமூகவியல்

| வ. எண் | உயர்நிலை அறிவியல் | நேர்நிலை அறிவியல் |
|---|---|---|
| 1. | ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்புவதை அடிப்படையாகக் கொண்டது. | என்னவெல்லாம் இருக்கவேண்டும், இவையெல்லாம் இப்படித்தான் செயல் பட்டாகவேண்டும் என்ற விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. |
| 2. | மதிப்பீடுகள் பற்றியது. | உண்மைகளைப் பற்றியது. |
| 3. | நிகழ்வுகளின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது. | ஆராய்ச்சியின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது. |
| 4. | மாறும் மனநிலையை அடிப்படையாகக் கொண்ட மனிதனைப் பற்றிய ஆய்வு ஆகும். எனவே, திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூற இயலாது. | மாறும், மாறாத்தன்மையுள்ள புறப்பொருள்களின் ஆய்வு என்பதால் திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூற இயலும். |

முதலான இவையும் அறிவியல் அடிப்படை கொண்டவையே எனலாம். ஆனால், அழகியல், அளவையியல், மானிடவியல், சமூகவியல், அறவியல் ஆகிய இந்த ஐந்து இயல்களும் மனிதனைப் பற்றி விளக்கினாலும், அறிவியல் இவற்றிலிருந்து சிறப்பாக வேறுபடுகின்றது. நேர்நிலை அறிவியல் உண்மைகளை மட்டுமே முன்வைக்கிறது. எனினும் அறவியல் முதலியன, ஏன்? எதற்கு? எப்படி? என அக்கால நிகழ்வுகளை அறிவியல் கண்கொண்டு மதிப்பீடுகளை முன்வைக்கின்றன. அதனால் இவை உயர்நிலை அறிவியல் எனப்படுகின்றன.

### நேர்நிலை அறிவியல்

ஒரு பொருள் குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டுள்ளது என்பதையும், குறிப்பிட்ட வகையில் செயல்படுகிறது என்பதையும், புலனறிவு மூலமாக ஆராய்ந்து விளக்குவது நேர்நிலை அறிவியல் ஆகும். விலங்கியல் (Zoology), தாவரவியல் (Botany), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) போன்றவற்றை நேர்நிலை அறிவியலுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

### அறவியல் பயிற்சி தரும் நிறுவனங்கள்

### 1. குடும்பம்

மனித உயிர்களிடையே இயல்பாக அமைந்த அன்பு என்ற உயர்ந்த உணர்வின் அடிப்படையில் சமுதாயத்தின் மூலக்கருவாக, அமைவதே குடும்பம் ஆகும். மிகப்பழங்காலம் முதல் இன்றுவரையில், சமுதாயத்தின் முதன்மைப் பயிற்சி நிலையமாகக் குடும்பமே விளங்குகிறது.

மனித வரலாற்றில் குடும்பமே முதல் நிறுவனமாக விளங்குகிறது. இக்குடும்பம், பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிக்கும் சமுதாய நிறுவனமாகும்.

### 2. கல்வி நிறுவனங்கள்

குடும்பத்துக்கு அடுத்தநிலையில், தனிமனிதனை நல்லறப் பயிற்சியில் ஈடுபடுத்துவன கல்வி நிறுவனங்களாகும். கல்வி நிறுவனங்கள் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கியவை யாகும். இவற்றின் வாயிலாக ஒழுக்கம், கட்டுப்பாடு மற்றும் பிற நற்பண்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> கணவன், மனைவி, குழந்தைகள் ஆகிய உறுப்பினர்களைக் கொண்டதே குடும்பம். அது குழந்தைகளின் உடல், உள்ளம், அறிவு, அறம், ஆன்மீகம் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமாகும். இத்தகைய குடும்பத்தில் நிலவும் அமைதி நாட்டிலும் பிரதிபலிக்கும்; குடும்பத்தில் அமைதி நிலவாவிடில் சமூகத்திலும் அதன் எதிரொலிகள் கேட்கும். எனவே, ஒரு சமூகத்தின் நல்வாழ்வுக்கும் பொது அமைதிக்கும் குடும்பம் ஒரு குறியீடாகிறது எனலாம்.

### கல்வி நிறுவனத்தின் பயன்கள்

- முன்னோர்களின் அனுபவக் கருத்துக் கருவூலங்களை எடுத்துக்காட்டித் தன்னைக் காத்துக்கொள்ளவும், வாழ்க்கையில் சிறப்படையச் செய்யவும் கல்வி நிறுவனமே பயிற்சி அளிக்கிறது.
- தனித்தன்மையை வளர்த்துக்கொள்ளவும், ஒற்றுமை, பொறுமை, நிதானம், அன்பு போன்ற நற்பண்புகளை வளர்க்கவும் கல்வி நிறுவனம் உதவுகிறது.
- பலன் கருதாது கடமையைச் செய்யவேண்டும் என்ற உயரிய உணர்வு, சகிப்புத்தன்மை, இன்னாசெய்யாமை, வாய்மை, பணிவு, ஒழுக்கம், முதலியவற்றைப் பின்பற்றி வாழும் முறைகளைப் பயிற்றுவிப்பதும் கல்வி நிறுவனமேயாகும்.
- சமநோக்கு, துணிவு போன்ற நல்லொழுக்கப் பண்புகளைப் பெறுவதற்குக் கல்வி நிறுவனம் வழிவகை செய்கிறது.
- அறவாழ்வின் பெருமையையும், மகிழ்ச்சியாக வாழ்வதற்குரிய வழிகளையும் பயிற்றுவித்துச் சமுதாயத்தில் மாணவர்கள் சிறப்பதற்குக் கல்வி நிறுவனங்கள் உதவுகின்றன.

### 3. குடிமைப்பயிற்சி நிறுவனங்கள்

தனிமனிதன் ஒரு சமுதாயத்தின் உறுப்பினனாக, ஒருநாட்டின் நற்குடிமகனாக அமையவேண்டும்

என்றால், அவன் குடிமைப்பயிற்சியையும் கல்வி நிறுவனப் பயிற்சியையும் பெறுவதோடு மட்டுமல்லாமல், நல்ல குடிமகனாக விளங்கும் தன்மையையும் உறுதி செய்யவேண்டும்.

குடிபெயர்ந்து ஒரு நாட்டில் வாழும் அனைவரும், குடியுரிமை பெறத் தகுதி பெற்றவராவர். குடியுரிமை பெற்றவர் குடிமைப்பண்பு பெறுவது அவர்தம் தலையாய கடமையாகும். சமுதாயத்தின் அறநெறிக் கட்டுப்பாட்டு விதிகளும், அரசாங்கத்தின் சட்ட விதிகளும் குடிமைப்பண்பு பெற வழிகாட்டியாக விளங்குகின்றன.

அரசியல் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி அறியவும், யாவரிடத்திலும் எளிமையோடு பழகவும், அன்புடையவராக இருக்கவும், அறிவினும் உயர்ந்த மக்கட்பண்புகளை வளர்த்துக்கொள்ளவும் குடிமைப் பயிற்சி நிறுவனங்கள் உதவுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

அன்பு, அடக்கம், அறிவு, அறம், ஒழுக்கம், பண்பு, நடுவுநிலைமை, வாய்மை, வெகுளாமை, கொல்லாமை, நாணம், நகை, ஈகை, இன்சொல், பிறரை இகழாமை, பொறையுடைமை, அழுக்காறாமை போன்றவற்றின் ஒன்றுபட்ட நிலையே குடிமைப் பண்பாகும் என்பதைத் திருக்குறள்வழி அறியலாம்.

## சிறந்த குடிமக்களின் பண்புகள்

ஒரு நாட்டின் சிறந்த குடிமக்களாகத் திகழப் பின்வரும் பண்புகள் இன்றியமையாதனவாகும்.

- உண்மையான நாட்டுப்பற்று
- சிறந்த கல்வியறிவு
- கடின உழைப்பு
- சகிப்புத்தன்மை
- உதவும் மனப்பான்மை
- மனிதநேயம்
- அகப்புறத்தூய்மை
- பொதுஅறிவு
- நேர்மையாக வரிகளைச் செலுத்துதல்
- வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்துதல்.

## 4. தொழில் நிறுவனங்கள்

குடும்பம், கல்வி நிலையம், குடிமைப்பயிற்சி நிறுவனம் ஆகிய மூன்றும் இயல்பான அன்பின் பிணைப்பினால் செயல்படுகின்றன. ஆனால், தொழிற்கூடங்கள் ஒப்பந்த அடிப்படையில் செயல்படுகின்றன.

தனிமனிதனின் தனித்திறமைகள் வெளிப்படுவதற்குரிய வாய்ப்புகளைத் தொழிற்கூடங்கள் அமைத்துத் தரவேண்டும். அவரவர் திறமைகள் வெளிப்படுவதற்குரிய வாய்ப்புகளைப் பாகுபாடின்றி வழங்குவதற்குத் தொழிற்கூடங்கள் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ஒருவன், தொழில் வேறுபாட்டையும், திறமை வேறுபாட்டையும் இணைத்துக்கொண்டு முன்னேற முடியும். தொழில் நிறுவனங்கள் ஒழுக்கம், காலம் தவறாமை, விதிமுறைக்குக் கட்டுப்பட்டு நடத்தல் போன்ற இன்றியமையாத பிற பண்புகளைப் பின்பற்றவும் கற்றுத்தருகின்றன எனலாம்.

## 5. அரசமைப்பு நிறுவனங்கள்

பிற அறவியல் பயிற்சி நிறுவனங்கள் எல்லாவற்றையும் வழிநடத்தும் ஆற்றல் பெற்றவையாக அரசமைப்பு நிறுவனங்கள் உள்ளன.

தொன்றுதொட்டு வரும் மக்கள் சமுதாயத்தின் அடிப்படை அறக்கோட்பாடுகள், புறத்தூண்டல்களால் அழியாமல் காப்பதும் அதற்குரிய சட்டங்களை இயற்றுவதும் இவற்றின் பணிகளாகும். இவை பிற நிறுவனங்களைக் காட்டிலும் மேலான அதிகாரங்களைக் கொண்டவையாகும். இவை தனிமனிதன் தன் உரிமைகளை அறிய உதவவேண்டும்; அவற்றைப் பாதுகாக்கவேண்டும். எல்லா வாய்ப்புகளையும் எல்லோரும் பெறப் பாடுபடவேண்டும். சமுதாயத்தில் மனிதனை எல்லா நிலையிலும் வளர்ச்சியடையச் செய்வதும் அரசமைப்பு நிறுவனங்களின் அடிப்படையான பணியாகும்.

*"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்*
*சேராது இயல்வது நாடு"* (குறள்: 734)

என்று, உடலுயிரை வருத்தும் பசியும், தீராத நோயும், அழிக்கும் பகையும் இல்லாத நாடே சிறந்த



Unit 7 Rev.indd 126 13-02-2020 20:30:31

நாடாகும் என்கிறார் வள்ளுவர். மேலும் அவர்,

*"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல*
*நாட வளந்தரு நாடு"* (குறள்: 739)

என செல்வம்தேடித் தன் மக்களைப் பிற இடங்களில் அலைய விடாதது நாடாகும் என்றும், அவ்வாறு அலையவிடுவது நாடன்று என்றும் அறிவிக்கிறார்.

குடும்பமும் ஏனைய அறப்பயிற்சி நிறுவனங்களும் தனிமனிதனை அறமுள்ளவனாக வளர்ச்சியடையச் செய்கின்றன. இவை, காலத்தையும் இடத்தையும் கடந்த எல்லையற்ற உலகளாவிய அறவியல் வாழ்வினைப் பற்றி அறிந்து கொள்ளவும் தன்னை மேம்படுத்திக்கொள்ளவும் மனச்சான்றின்படி வாழவும் தனிமனிதனை நெறிப்படுத்துகின்றன எனலாம்.

## பழக்கம் (Habit)

கிரேக்கத் தத்துவ ஞானியான சாக்ரடீஸ், "நல்லொழுக்க நற்பண்பு" (Virtue) என்பது, உயர்நிலை அறிவுடைமை என்று கூறினார். அவருக்குப் பின்வந்த அரிஸ்டாட்டில், 'நல்லொழுக்க நற்பண்பு என்பது, நல்ல பழக்கங்களை நமது வாழ்வில் நிலையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதே' என்று கூறினார். இவ்விரு கிரேக்க அறிஞர்களின் கூற்றுகளும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை. இவற்றின் சாரம் ஒன்றுதான். நல்ல பழக்கங்களைக் கண்டறிந்து நிலையாகக் கடைப்பிடிப்பதால் பண்புகள் மேம்படுவதுடன் அறிவாற்றலும் வளரும் என்பதுதான்.

ஏற்றுக்கொண்ட செயல்களைப் பலமுறை திரும்பத் திரும்பச் செய்யும்போது அவை பழக்கமாக மாறிவிடுகின்றன. ஒருவயதுக் குழந்தை நடக்கத் தொடங்கும்போது முதலில் சிறிது தடுமாறுகிறது. சில முறை கீழேயும் விழுகிறது. ஆனால், பலமுறை நடந்தபின் அது பழக்கமாக மாறி இயல்பாகிவிடுகிறது. எந்தச் செயலும் பழக்கமானபின், இயல்பாகவே நம் மனம், அதில் ஈடுபட்டுவிடுகிறது.

நற்செயல்களைச் செய்வதென்பது ஒரு பழக்கமாக மாறி, மனித மனத்தில் நற்சிந்தனையாகும்போதுதான், உண்மையிலேயே, மனிதன் அறப்பண்புள்ளவன் ஆகிறான். நற்செயல்களைச் செய்வதில் ஒருவிதமான மகிழ்வும் ஈடுபாடும் மனிதனுக்குக் கிடைக்கின்றன. அரிஸ்டாட்டில், 'ஒரு மனிதன் நல்ல செயல்களைச் செய்வதில் மகிழ்ச்சியடைந்து நல்லவனாவதாகக் கூறுகிறார். எனவே, நற்செயல்களைச் செய்யும் பழக்கம் ஒருவனிடத்து வேரூன்றும்பொழுது, அப்பழக்கம் இயல்பானதாகிறது எனலாம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்க்கலைக்களஞ்சியம் "ஐரோப்பிய அறநூல் வரலாறு" என்னும் தலைப்பில் பின்வரும் செய்திகளைத் தருகிறது.

"அறிவும் சிந்தனையும் சுய நிருணயமும் அறத்தின் உயிர்நாடிகள்"

– சாக்ரட்டீஸ்

"ஏற்புடைய சூழ்நிலையையும் சிறந்த அரசியல் திட்டத்தையும் அமைத்து உத்தம இலட்சியங்களைத் தருக்க முறையில் நிரூபணம் செய்து மக்களை அறவாழ்வில் ஈடுபடச் செய்ய வேண்டும்".

– பிளாட்டோ

"ஞானம், தன்னடக்கம், தைரியம், நியாய உணர்ச்சி" இவை அறத்தின் வேர்கள்"

- அரிஸ்டாட்டில்

## நடத்தை (Conduct)

விரும்பியேற்ற செயல்களும், பழக்க வழக்கங்களுமே ந டத்தை எனப்படும். நடத்தை நிலையில் ம னமும் உடலும் ஒருங்கிணைந்து இயல்பாகச் செயல்படுகின்றன.

இந்நிலையில், ஒரு மனிதனின் நட த்தையில், அவனது அகப்பண்புகள் அனைத்தும் வெளிப்படுவதால், நடத்தையை ஒரு மனிதனின் ஆளுமையைத் தீர்மானிக்கும் கருவியாகக் காணலாம். நடத்தை என்பது



Unit 7 Rev.indd 127 13-02-2020 20:30:32

ஒரு மனிதனின் ஓரிரு செயல்களை மட்டும் குறிப்பதில்லை. அவன் வழக்கமாகச் செய்யும் எல்லாவகைச் செயல்களையும் பொறுத்தே நடத்தை தீர்மானிக்கப்படுகிறது.

## அறப்பண்பு (Character)

அறப்பண்பு என்பதைப் பற்றிய ஆய்வு, அறவியலில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. அறப்பண்பின் முக்கியத்துவத்தைப் பின்வரும் ஆங்கிலத்தொடர்கள் வலியுறுத்துகின்றன என்கிறார் பில்லிகிரகாம்.

ஒருவர் உடைமையை இழக்கும் போது, எதையும் இழப்பதில்லை;
ஒருவர் உடல்நலத்தை இழக்கும் போது, எதையோ இழக்கிறார்;
ஒருவர் பண்பை இழக்கும் போது, அனைத்தையும் இழக்கிறார்.

*When wealth is lost, nothing is lost;*
*When health is lost, something is lost;*
*When character is lost everything is lost.*



மனித வாழ்க்கையில் எந்த அளவுக்குப் பண்புடைமை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பது, இத்தொடர் மூலம் அறியப்படுகிறது.

நமது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பே அறப்பண்பாகும். சிலவகைச் செயல்களைப் பழக்கமாகச் செய்யும்போது, அச்செயல்களுக்குப் பின்னே இருக்கக்கூடிய நல்மனப்பாங்கு அறநிலையாக கருதப்படுகிறது. இந்நிலையில், நல்வழியில் செல்லும்ஒருவனதுமனம்முழுவதுமாக அறப்பண்பு உடையதாகிறது. இப்பண்பு, அவனது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுகிறது. குடும்பத்திலும் சமூகச்சூழலிலும், வளர்ந்தவிதத்திலும் கற்றுக்கொண்டவற்றிலும் தாக்கம் செலுத்தி அறப்பண்பை உருவாக்குகின்றது.

ஒவ்வொரு செயலும் நமது உள்மனத்தில் ஓர் ஆழமான பாதிப்பை உண்டாக்குவதால், நமது நடத்தையும் அறப்பண்பை உருவாக்குவதில் பங்கேற்கிறது.

## அ) அறவியலும் பிற சமூக அறிவியல்களும் (Ethics and other Social Sciences)

அறவியல் என்பது ஓர் உயர்நிலை அறிவியல் என்று அறிந்தோம். அறவியல் ஓர் அறிவியல் என்ற வகையில், அது எவ்வாறு பிற சமூக அறிவியல்களுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதை இப்பகுதியில் காண்போம்.

**உங்களுக்குத் தெரியுமா?**



'சமூகவியல்' (Sociology) என்ற சொல்லைப் பிரெஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞரும், சமூகவியலாளருமான ஆகஸ்தே காம்தே (Auguste Comte) (1798 – 1857) என்பவர், முதன்முதலில் உருவாக்கிப் பயன்படுத்தினார்.

## அறவியலும் சமூகவியலும் (Ethics and Sociology)

அறவியல் என்பது, மனிதனின் ஒ முக்கத்துடன் தொடர்புடையதாகும். அறவியல் மனிதனுக்குத் தேவையான நன்னடத்தை முறைகளையும், விதிகளையும் உருவாக்கியுள்ளது.

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்"* (குறள்: 131)

என்கிறார் வள்ளுவர். சமூக அறிவியலும் அறவியலும் இணைந்து, மக்களின் செயல்முறைகளை ஆராய்ந்து, அவை ஏற்கக்கூடியவையா? பயன்தரக் கூடியவையா? என்று முடிவு செய்கின்றன. சமூகவியலுக்கும் அறவியலுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. சமூகவியலில் உள்ள எல்லாச் சிக்கல்களையும் அறவியலின் அடிப்படையில் விளக்கவியலாது. அதுபோலவே, அறவியல் சிக்கல்களையும் சமூகவியலால் விளக்கவியலாது. எனவே, ஒரு சிக்கலைச் சமூகவியல் ஏற்றுக்கொண்ட அதேநோக்கில், அறவியலும் ஏற்கவேண்டியதில்லை எனலாம்.

சமூகவியல் என்பது, சமூகத்தைப் பற்றி ஆய்வு செய்யும் ஓர் அறிவியல் ஆகும். ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் அங்கம் என்பதால், சமூகவியல் அறவியலோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறலாம்.

ஒவ்வொரு தனிமனிதனின் நடத்தையும் சமூகத்தில் ஏதாவது ஒருவிதமான விளைவைத் தோற்றுவிக்கவே செய்கிறது. பெரும்பாலும் தனிமனிதனின் செயல்கள், சமூக மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களின் தாக்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

தனிமனிதன் தனித்துச் செய்யும் செயல்களைவிடச் சமூகத்தின் அங்கமாயிருந்து அவன் செய்யும் செயல்களையே அறவியல் கருத்தி ல்கொள்கிறது. எனவே, அறவியல் ஆய்வுகளுக்கும் சமூகவியல் ஆய்வுகளே அடித்தளங்களாக அமைகின்றன.

### ஆ) அறவியலும் மானுடவியலும் (Ethics and Anthropology)

மானுடவியல் என்பது, மனித இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்கின்றது. அறவியல் என்பது, சில மானுடவியல் மரபுகளின் அடிப்படையில் அமைகின்றது. எனவே, மானுடவியலின் ஆராய்ச்சி முடிவுகள், அறவியலுக்கும் பெரிதும் உறுதுணையாய் உள்ளன எனலாம்.

மிகப்பழங்காலம் தொட்டு, மனிதச் சமுதாயம் பலவகையான மரபுகளையும் நம்பிக்கைகளையும் கடைப்பிடித்து வந்துள்ளது. இவற்றில் சில மரபுகளும் பழக்கவழக்கங்களும் தீய விளைவுகளைத் தோற்றுவித்தாலோ, அல்லது தேவையற்ற பயன்களை அளித்தாலோ அவை கை விடப்படுகின்றன என்பதை மானுடவியல், ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மரபுவழி அறவியல் கோட்பாடுகளை நாம் வடிவமைத்து ஏற்றுக்கொள்ளும் முன்னர், மானுடவியல் ஆய்வுகளின் முடிவுகளைக் கருத்தில் கொள்வோமானால், அறவியலில் பயனற்ற பல கோட்பாடுகளைத் தவிர்க்கலாம். இவ்வகையில் மானுடவியல் அறவியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

### இ) அறவியலும் உளவியலும் (Ethics and Psychology)

உளவியல் என்பது மனித மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகும். மனித மனத்தில் நிகழும் மாறுதல்களைப் பற்றியும், மனிதச்செயல்களுக்குப் பின்னணியாக அமையும் உணர்ச்சிகள் மற்றும் அறிவாற்றல் பற்றியும் உளவியல் ஆராய்கின்றது. மனித நடத்தைகள் யாவும் பல்வேறு மனநிலைகளின் வெளிப்பாடுகளேயாகும். மனிதச்செயல்கள் யாவுமே தொடக்கத்தில் எண்ணமாக எழுந்து, பின்னரே செயல்வடிவத்திற்கு வருவதால், உளவியலுடன் அறவியலுக்கு நெருங்கிய தொடர்புள்ளதாகக் கூறலாம்.

மனித உணர்ச்சிகளாகிய காமம், குரோதம், ஆசை, அச்சம், பசி, இரக்கம் முதலியன மனிதனுடைய செயல்களை ஏதாவது ஒருவிதத்தில் பாதிக்கின்றன. எனவே, உளவியல் அறிவு, அறவியல் ஆராய்ச்சிக்கு மிகத்தேவையான ஒன்றாகிறது.

அண்மைக்காலங்களில் உளவியலில் சமூக உளவியல் (Social Psychology), நடத்தைசார் உளவியல் (Behavioural Psychology) என்ற இருபிரிவுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சமூக உளவியல், ஒரு சமூகம் தனிமனிதனின் மனநிலையை எவ்விதத்தில் பாதிக்கின்றது என்பதைப் பற்றியும், தனிமனிதனின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் சமுதாயத்தில் எத்தகைய விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன என்பதைப் பற்றியும் ஆராய்கின்றது. நடத்தைசார் உளவியல், சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படும் தனிமனிதப் பழக்கவழக்கங்களைப் பற்றி ஆராய்கின்றது. உளவியலின் இவ்விரு பிரிவுகளுமே, அறவியல் ஆராய்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

### ஈ) அறவியலும் தத்துவவியலும் (Ethics and Philosophy)



ராஸ்டல்



ஹெகல்

அறவியலுக்கும் தத்துவவியலுக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஹெகல் (Hegal)



Unit 7 Rev.indd 129 13-02-2020 20:30:32

மற்றும் கிரீன் (Green) போன்றவர்கள், தத்துவவியலை அடிப்படையாகக் கொண்டே அறவியல் அமைவதாகக் கருதுகின்றனர். ஆனால், ராஸ்டல் (Rashdall) போன்றவர்கள், அறவியலை அடிப்படையாகக் கொண்டே தத்துவவியல் அமைவதாகக் கூறுகின்றனர். இந்த விவாதம் ஒருபுறம் தொடர்ந்தாலும், அறவியலும் தத்துவவியலும் மிக நெருங்கிய தொடர்புடையவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. கீழ்க்கண்ட கருத்துகளின் அடிப்படையிலும் இதை விளக்கலாம்.

- அறக்கருத்துகள் யாவும் சமுதாய நடத்தைகள் வழியே உருவாக்கப்பட்டுள்ளன.
- உயிர், உலகம், இறைவன் பற்றிய கருத்துகளை ஆராய்வதும், அவை பற்றி விரிவாக விளக்க முனைவதும் தத்துவவியலின் அடிப்படையாகும்.
- அறவியல் என்பது அறிவியல் மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. தத்துவவியல் அந்த அறிவியல் மதிப்பீட்டை முறைப்படுத்துகிறது.
- தத்துவவியல், உலகத்திற்கும் மனிதனுக்குமான தொடர்பை விளக்குகிறது. அறவியலோ, மனிதனின் மனச்சான்றுடன் விவாதிக்கிறது.
- அறவியல் தீர்ப்பு என்பது, முழுமையானதும் தெளிவானதும் நேரிடையானதும் ஆகும்.
- கடவுளுக்கும் மனிதனுக்குமான தொடர்பையும், உலகத்திற்கும் சமுதாயத்திற்குமான தொடர்பையும் அறிந்துகொள்ளத் தத்துவவியல் உதவுகிறது. எனவே, மனிதனை நெறிப்படுத்தும் அறவியலுக்கும், மனிதத்தேடல்களை ஊக்குவிக்கும் தத்துவவியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளது எனலாம்.

## ஒழுக்கத்தின் அடிப்படை விதிகள்

கடவுளை ஏற்கும் தத்துவவியலாளர்கள், ஒழுக்கத்தைச் சமூகத்தில் நிலைநிறுத்துவதற்குப் பயன்படும் அடிப்படை விதிகளாகப் பின்வரும் மூன்றைச் சுட்டுகின்றனர்.

1. பற்றுறுதி சுதந்திரம் (Freedom of Will)
2. உயிரின் இறவாத்தன்மை (Immortality of Soul)
3. கடவுளின் இருப்பு (Existence of God)

## பற்றுறுதி சுதந்திரம் (Freedom of Will)

பற்றுறுதி சுதந்திரம் என்பது, மனிதனின் தீர்மானங்களுக்கும் செயல்களுக்கும் பின்புலமாகி, அவற்றை இயக்கும் 'மன ஆற்றல்' ஆகும். இந்த ஆற்றல், அனைத்து மனிதர்களிடத்தும் காணப்படுகிறது. மனிதன், தன் விருப்பப்படி எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் சுதந்திரமாக இயங்கினால் மட்டுமே அவன் செய்யும் செயலுக்கு அவனைப் பொறுப்பாக்க முடியும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

இந்திய, சீன மற்றும் ஈரானியத் தத்துவங்களைப் போலவே, கிரேக்கத் தத்துவமும் தொன்மையானதாகும். கிரேக்கத் தத்துவ உலகில் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்பவர் சாக்ரடீஸ் கி.மு. (பொ.ஆ.மு) 470 – 399 ஆவார். அவரைத் தொடர்ந்து இருவர் தத்துவ உலகிற்குப் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஒருவர் சாக்ரடீஸின் மாணவர் பிளாட்டோ, கி.மு. (பொ.ஆ.மு) 428-348); மற்றவர் பிளாட்டோவின் மாணவர் அரிஸ்டாட்டில் கி.மு. (பொ.ஆ.மு) 384 – 322.

ஒரு செயலைச் செய்வதற்குப் பல வழிகள் இருந்தபோதிலும், மனிதன் அவற்றுள் தனக்கு பிடித்ததையே தேர்ந்தெடுத்துச் செயல்படுகின்றான். இதனையே 'பற்று உறுதி சுதந்திரம்' என்கிறோம். இந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி ஒருவன் செயலாற்றும்பொழுது, பிறருடைய சுதந்திரத்தைப் பாதிக்காதவகையில் அச்செயல் அமையவேண்டும். இதற்கு மனிதனின் பகுத்தறிவு உறுதுணையாக இருக்கிறது.

மரபான சமயங்கள் அனைத்தும், கடவுளே சுதந்திரமுள்ளவன், மனிதன் கடவுளுக்குக் கட்டுப்பட்டவனே என்கின்றன. கடவுளையும் மனிதனையும் பற்றிய இத்தகைய விவாதங்கள், இன்றுவரை அறவியல் வரலாற்றில் தொடர்கின்றன. இந்த விவாதங்களின் அடிப்படையில், பொதுவாக மூன்றுவகைக் கொள்கைகள் உருவாகியுள்ளன.



Unit 7 Rev.indd 130 13-02-2020 20:30:32

அ. தீர்மானக் கொள்கை


ஆ. தீர்மானிக்க இயலாத கொள்கை

இ. தன் தீர்மானக் கொள்கை.

## அ) தீர்மானக் கொள்கை

மனிதனின் சுதந்திர மனநிலை, புறவுலகப் பொருள்களைப் போன்றே, இயற்கை விதிகளுக்கு உட்பட்டதாகும். குறிப்பாகக் காரண காரிய விதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும். சுதந்திர மனநிலை எவ்வழியில் செயல்படவேண்டும் என்பதை, அதற்கு அப்பாற்பட்ட சக்திகளும் தீர்மானிக்கின்றன. இதனையே, "நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப்படும்" என்கிறார் கணியன் பூங்குன்றனார். அதாவது, நீரில் மிதக்கும் தெப்பம்போல் உயிரும் முறை வழிப்படும் என்கிறார். இங்கு முறை என்பதைச் சிலர் விதி என்றும், வேறு சிலர் நியதி என்றும் கருதுகின்றனர். விதி என்பதை இயற்கைக்கு அப்பாற்பட்டது என்றும், நியதி என்பதை இயற்கையின் ஒழுங்கமைவு என்றும் விளக்கலாம். இங்குச் செயல்களைச் செய்யும் வழியைத் தேர்வு செய்வதில் மனிதனுக்குப் பங்கில்லை என்றும், கடவுளும் விதியுமான மேல்நிலையாற்றல்கள் கூடிச் சுதந்திர மனநிலையின் போக்கைத் தீர்மானிக்கின்றன என்றும் பெரும்பாலான தீர்மானக் கொள்கையினர் கூறுகின்றனர். தீர்மானக் கொள்கையினரின் இக்கருத்து ஏற்புடையதன்று; இக்கொள்கைக்கு எதிராகப் பல வாதங்கள் உள்ளன.

## ஆ) தீர்மானிக்க இயலாத கொள்கை



வில்லியம் ஜேம்ஸ்



ஹென்றி பெர்க்ஸோன்

அமெரிக்கத் தத்துவ அறிஞரான வில்லியம் ஜேம்ஸ் மற்றும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞரான ஹென்றி பெர்க்ஸோன் ஆகியோர், மனிதர்களது சுதந்திர மனநிலை நிபந்தனையற்றது என்றும், அதனால் தீர்மானிக்க இயலும் என்றும் வாதிடுகின்றனர். தேர்வு செய்யும் உரிமையைப் பகுத்தறிவு மனிதனுக்கு வழங்கியுள்ளது என்பதால், மனிதனுக்கு முழுச்சுதந்திரம் உண்டு என்கின்றனர். இக்கொள்கையின்படி, தீய இயல்புடையவர்கள் தாம் விரும்பிய வழிகளில் தவறிழைக்க வாய்ப்புண்டு என்பதால், இந்த வாதத்தை முழுமையாக ஏற்கமுடியாது எனலாம்.

## இ) தன் தீர்மானக் கொள்கை

மேலே விவாதிக்கப்பட்ட இரு கொள்கைகளுமே, எதிரெதிர்த் தத்துவநிலைகளை விளக்குகின்றன. இவ்விரண்டுமே ஏற்றுக்கொள்ள முடியாதவையாக அமைந்துள்ளமைக்குக் காரணங்கள் கூறப்பட்டன. எனவே, இவ்விரு கொள்கைகளுக்கும் நடுவுநிலையாக ஒரு கொள்கை தேவைப்படுகின்றது. அவ்வகையில் அமைந்ததே தன் தீர்மானக் கொள்கையாகும்.

தன் தீர்மானக் கொள்கையாளர்கள், மனிதனின் சுதந்திரநிலை புறவுலகில் உள்ள எதனாலும் தீர்மானிக்கப்படவில்லை; மாறாகத் தன் செயல்களை மனிதனே தீர்மானிக்கிறான் என்பர். குறிப்பிட்ட செயலைத் தேர்ந்தெடுத்தபின், அச்செயலின் எல்லா விளைவுகளுக்கும் தேர்ந்தெடுத்தவனே பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. (எ.கா) ஒரு மாணவன் மேல்நிலைப்பள்ளியில் எந்தப் பாடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதில் அவனுக்குச் சுதந்திரம் இருந்தாலும், ஏதாவது ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுப்பதால் பின்னர் அவனது பட்டப்படிப்பு எத்துறையில் இருக்கவேண்டும் என்பதும், அந்தத் தன் தேர்வினாலேயே தீர்மானிக்கப்பட்டு விடுகிறதல்லவா !

எனவே, மனிதனின் செயல்நிலைக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைவரையே சுதந்திரம் உண்டு என்பதும், அதற்கப்பால் அது தன்கட்டற்ற தன்மையை இழந்துவிடுகிறது என்பதும் தெளிவாகிறது. தனக்குள்ள பகுத்தறிவின் துணைகொண்டு, ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கச் சுதந்திரம் இருப்பதால், மனிதன் விலங்குகளின்று மாறுபட்டு உயர்நிலையில் வைக்கப்பெறுகிறான். ஆனால், அவனது சுதந்திரத் தேர்வுக்கும் கடந்து செல்ல முடியாத சில எல்லைகளுண்டு. எல்லையற்ற சுதந்திரம் யாருக்கும் இங்கு இல்லை என்கிறது தன் தீர்மானக் கொள்கை.



Unit 7 Rev.indd 131 13-02-2020 20:30:32

## உயிரின் இறவாத்தன்மை

உயிரின் இறவாத்தன்மை என்பது, மனிதன் இறந்தபின்னும் அவன் வாழ்கிறான் எனக் கருதி, இயற்கையிறந்த மேலாற்றல்களை நம்பும் ஆன்மக்கொள்கையை வலியுறுத்துகிறது. உயிரின் அல்லது ஆன்மாவின் எதிர்கால இருப்பை உறுதி செய்ய மனசாட்சியும் தேவை என்கிறார் காண்ட்.



இமானுவேல் காண்ட்


காண்டின் கருத்துப்படி, உள்ளத்திலிருந்து எழும் உள்ளுணர்வின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் என்பது எல்லாவற்றிலும் உயர்ந்ததாகும். மேலை மற்றும் கீழை நாட்டுத் தத்துவக் கொள்கைகளில், உயிரின் இறவாத்தன்மை என்பது, ஒழுக்கத்தின் அடிப்படை விதியாகக் கருதப்படுகிறது. அதாவது, ஒழுக்கமுடைய உயிரே இறவாத்தன்மைக்கு உரியதாகிறது என்கின்றனர்.

## கடவுளின் இருப்பு

அறவுணர்வு உடையோரின் மனநிலை வளர்ச்சியில் கடவுள் உயர்ந்த இடத்தில் இருக்கிறார். கடவுள் மிகவும் புனிதத்தன்மை மிக்கவராகவும், முழுமை நிறைந்தவராகவும் அறியப்படுகிறார். கடவுள் மட்டுமே மனிதனின் அனைத்துச் செயல்களையும் உள்நோக்கங்களையும் அறிந்தவர் எனச் சமயங்கள் கருதுகின்றன. எனவே, அறத்தை நிலைநாட்டத் தனி மனிதர்களுக்குக் கடவுள் தேவைப்படுகிறார். அதேவேளையில், அறப்பண்புகளற்றுத் தீயவனாகச் செயல்பட்டால், கடவுள் தண்டிப்பார் என்ற அச்ச உணர்வும் கற்பிக்கப்படுகிறது.


## அறவியலின் இன்றியமையாமை

கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில், மனிதனை ஒரு 'சமூக விலங்கு' (Man is a social animal) என்றும், ஆனால் 'பகுத்தறிவுள்ள விலங்கு' (Rational animal) என்றும் வரையறை செய்துள்ளார். காமம், பசி, அச்சம் போன்ற உடல் சார்ந்த உணர்ச்சிகள் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவானவை. இந்த உணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டுமே மனிதன் செயலாற்றினால், அவனுக்கும் விலங்கிற்கும் அதிக வேறுபாடுகளைக் காண இயலாது. பகுத்தறிவுள்ள ஒரே காரணத்தினால், மனிதன் விலங்கினின்றும் வேறுபட்டு உயர்நிலையில் வைக்கப்படுகிறான்.



அரிஸ்டாட்டில்

இப்பகுத்தறிவை அவன் எவ்வகையில் பயன்படுத்தவேண்டும் என்பதை, அறவியல் கோட்பாடுகளே அவனுக்கு உணர்த்துகின்றன. கடவுளைக் கற்பிக்கும் சைவம், வைணவம், யூதம், கிறித்துவம், இசுலாம், சீக்கியம் எனச் சமயங்கள் பலவற்றிலும் அறக்கோட்பாடுகள் உள்ளன. எனினும், கடவுளின்றியே நல்லொழுக்கம்வழி மனிதன் அமைதியும் நிறைவும் பெறலாம் என்பதைச் சிறப்பாகச் சமண பௌத்த சமயங்களே வலியுறுத்துவதை, அவற்றின் தனித்தன்மையாகக் குறிப்பிடலாம்.



பிளாட்டோ

அறவியல் கோட்பாடுகளுக்குப் பௌத்தமும் சமணமும் இன்றளவிலும் உலகம் ஏற்கக்கூடிய அன்பு, நேர்மை, தூய்மை, சமத்துவம், ஒழுக்கம், இரக்கம், உண்மை, எனப் பல்வேறு அறநெறிகளின் பிழிவை அளித்துள்ளன. இது சிறப்பாகக் கருதத்தக்கதாகும்.



Unit 7 Rev.indd 132 13-02-2020 20:30:33

தனிமனித வாழ்விலும் சமுக வாழ்விலும், ஒரு முக்கிய இடத்தை அறவியல் கோட்பாடுகள் வகிக்கின்றன. தனிமனிதனின் உயர்வுகூட அவன் ஏற்றுக்கொண்ட அறநெறிகளைப் பொறுத்தே அமைகிறது என்பதையும், செம்மையான அறநெறிகளே ஒரு சமூகத்தின் ஒற்றுமை மற்றும் நிலையான தன்மையைப் பேணக்கூடியவையாய் உள்ளன என்பதையும், அறநெறியினின்றும் வழுவிய சமுதாயங்கள் யாவுமே நலிவடைந்தன என்பதையும் மனித வரலாறு நமக்கு எடுத்துரைக்கின்றது.

- மக்களிடம் தவறாகப் பரவிவிட்ட சில அறமற்ற பழக்கவழக்கங்களை நீக்கவும், அல்லது அறத்தோடு அவற்றை இணைக்கும்வகையில் மாற்றியமைக்கவும் அறவியல் அறிவு துணைபுரிகின்றது.
- மாறிவரும் சமுதாயச் சூழல்களுக்கேற்ப, உலக ஒருமைப்பாடு மற்றும் மனிதநேயக் கொள்கைகளின் அறச்சிறப்பை எடுத்துக்கூறிப் பொதுமைநிலையில் நின்று மனிதர்கள் செயல்பட அறவியல் அறிவே உதவுகிறது.
- இன்று உலகின் பல பகுதிகளிலும் உள்ள பல்வேறு பிரிவு மக்களிடத்தும் காணப்பெறும் அமைதியின்மை மற்றும் அறமல்லாச் செயல்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தவும் அறவியல் அறிவே காரணமாகிறது.
- ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், 'இதுதான் பொருந்தும்' என்று விரைந்து முடிவு செய்யவும், முடிவு செய்ததைச் செயல்படுத்தவும் அறவியல் அறிவு வழிகாட்டுகிறது.
- மானுடர்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் அளிக்கும் அறத்தைவிட நன்மையானது என்று வேறு எதுவும் இருக்கமுடியாது என்கிறார் வள்ளுவர்.

## அறச்செயல்களும், அறஞ்சாராச் செயல்களும் (Moral Actions and Non – Moral Actions).

### அறச்செயல்கள் (Moral Actions)

மனிதன் பல செயல்களில் ஈடுபடுகிறான். சமுதாயத்தோடு இணைந்து வாழும் மனிதனின் செயல்கள் சரியான வையா, தவறானாவையா, நல்லவையா, கெட்டவையா, ஏற்புடையவையா, ஏற்பற்றனவா, சமுதாயத்தை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பாதிக்கும் இயல்புடையனவா என்றெல்லாம் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த ஆய்வுகளின் முடிவாகச் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்காத செயல்கள்அனைத்தும் நற்செயல்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றையே அறச்செயல்கள் என்கிறோம்.

*அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை*
*மறத்தலின் ஊங்கில்லை கேடு"* (குறள்: 32)

என, ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை, அவ்வறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடத் தீமையானதும் இல்லை என்கிறார் வள்ளுவர்.

பகுத்தறிவின் அடிப்படையில் ஒருவன் விரும்பியேற்றுச் செய்யும் செயல், இடைவிடாப் பயிற்சியின் காரணமாகப் பழக்கமாகிறது. இந்த நற்பழக்கமே அறச்செயல் எனப்படுகிறது.

*"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும்வா யெல்லாஞ் செயல்"* (குறள்: 33)

எனச் செல்லும் இடமெல்லாம் இயன்ற வகையில் அறச்செயலைச் செயல்படுத்தச் சொல்கிறார் வள்ளுவர்.

### அறஞ்சாராச் செயல்கள் (Non – Moral Actions)

அறம் சார்ந்தவை மற்றும் அறம் சாராதவை எனச் செயல்களை வேறுபடுத்தும்போது, 'அறஞ்சாரா' என்ற சொல்லுக்கான பொருள் மிகவும் நுண்மையானதாகும். அறத்திற்கு எதிரான செயல் என, இதற்குப் பொருள்கொள்ளக்கூடாது. அறம் என்ற மதிப்பீட்டு வளையத்திற்குள் வராமல் அதற்கு வெளியில் நிற்கும் செயல்கள் எனப்பொருள் கூறவேண்டும்.

மதம்பிடித்த யானை, வண்டியைக் குடைசாய்க்கும் மாடு, மனநிலை பிறழ்ந்த மனிதன் போன்றோரின் செயல்களை 'அறஞ்சாராச் செயல்கள் என்ற வகைப்பாட்டிற்குள் அடக்கலாம்.


Unit 7 Rev.indd 133 13-02-2020 20:30:33

அறத்தின் அடிப்படையில் அளவிட முடியாத செயல்களை, 'அறஞ்சாராச் செயல்கள்' என்கிறோம். ஒரு குறிப்பிட்ட மனிதன், ஒரு குறிப்பிட்ட தருணத்தில் செய்யும் செயல்கள், அவனது அறிவினாலோ உணர்வினாலோ உந்தப்படாமல், என்ன நடக்கிறதோ இதை ஏன் செய்கிறோமோ என்று அவனே அறியாமல் அவனால் செய்யப்படும்போது, அத்தகைய தன்மறதிச் செயல்களுக்கு சரி, தவறு என்ற பழகிய முத்திரைகளைக் குத்தக்கூடாது. இத்தகைய முத்திரை குத்தப்படாத செயல்களே, அறஞ்சாராச் செயல்கள் எனப்படுகின்றன.

இடதுபுறம் வகிடெடுத்துத் தலை சீவுகிறவர்கள் அதிகமுள்ள ஒரு சமூகத்தில் ஒருவன் வலதுபுறம் வகிடெடுத்துத் தலை சீவினால் அவனது அச்செயல் கேலிக்குரியதாக இகழப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நிலவிவரும் அற மதிப்பீடுகளின் அடிப்படையில், இது இவ்வாறு செய்யப்படுகிறது. ஆனால், வலதுபுறம் வகிடெடுத்துச் சீவியவன் எக்குற்றத்தையும் செய்துவிடவில்லை. பொதுப்பண்பாட்டிலிருந்து விலகியதாக அவன் செயல் உள்ளதாலேயே அவன் இகழப்படுகின்றான். அவ்வாறு அவனை இகழ்வது தவறாகும். அச்செயலை அவன் அனிச்சையாகவோ நனவிலி நிலையிலோ செய்திருக்கலாம்; அத்தகைய செயலுக்கு நன்மை அல்லது தீமை என்ற மதிப்பீட்டை நாம் கற்பிக்க முடியாது. இவ்வாறு நன்மை தீமை கற்பிக்க முடியாத அற வரையறைக்கு வெளியில் நிற்கும் செயல்களையே 'அறஞ்சாராச் செயல்கள்' என்கிறோம்.

நம் வீட்டிற்கு வந்த விருந்தினர் ஒருவர், உணவு மேசையில் அமர்ந்திருக்கும்போது, மேசை மீதுள்ள தண்ணீர்க்குவளையைக் கைதவறித் தட்டிவிட்டுவிடுகிறார். நம்மை அவமதிக்கும் செயலாக, இதைக் கருதக்கூடாது. அத்தகைய நோக்கம் நமது விருந்தினருக்கு இல்லாதபோது, அக்குற்றத்தை அவருக்கு நாம் கற்பிப்பது அறமாகாது. மதிப்பதும் அவமதிப்பதுமான இந்த இரண்டு எல்லைகளையும் தாண்டித் தன்னிச்சையாக அவர் கைப்பட்டுக் குவளை கீழே விழுந்தது என்பது, அறஞ்சாராச் செயலுக்குச் சிறந்த சான்றாகும்.

ஒரு மனிதன் செய்யும் செயலில் நன்மையோ, தீமையோ இல்லை. அதைச் செய்யத் தூண்டும் அவனது நோக்கத்தில்தான் அதைக் காணவேண்டும். இருவர் ஒரே செயலைச் செய்கின்றனர். ஒருவனுக்கு உள்நோக்கம் உள்ளது, இன்னொருவனுக்கு அத்தகைய நோக்கம் ஏதும் இல்லை. உள்நோக்கம் கொண்டவனின் செயல் அறம் அல்லது அறமின்மையாகலாம். எந்த நோக்கமும் அற்றவனின் அனிச்சைச் செயலில் அறமோ அறமின்மையோ இல்லை என்பதை அறியவேண்டும்.

பெருங்கருணையால் தூண்டப்பட்டுப் பிச்சையிடுகிற ஒருவனுக்கும், பிச்சையிடுகிறோம் என்பதே தெரியாமல் திருவோட்டில் காசுபோடும் குழந்தைக்கும் வேறுபாடுள்ளது. முதல் செயல் அறமாகும். குழந்தையின் செயலில் எவ்வித அறநோக்கமும் இல்லை என்பது வெளிப்படையாகும். ஒரு மனிதனின் பெருமிதத்தை வளர்ப்பதாகவோ, அல்லது அவனைக் கீழ்மைப்படுத்துவதாகவோ, அறஞ்சாராச் செயல்கள் அமைவதில்லை. நனவிலியின் தூண்டுதலுக்கு உட்பட்டு அவை செய்பவனின் நோக்கமின்றியே நிகழ்கின்றன.

## நற்செயல் (Good Action)

ஒரு குழந்தை, தன் விரலை வாயில் வைத்துச் சுவைத்துக்கொண்டிருக்கிறது. இது அறிவோடு இணைந்த செயலா? அல்லது விரும்பி ஏற்ற செயலா? என்ற கேள்விக்கு, ஆய்ந்து விடை காண முற்படுவது அறவியலின் கடமையாகும்.

குழந்தை தன் விரலை வாயில் வைத்துச் சுவைக்கும்போது, அது அறிவுக்கு உட்படாத செயலே. ஆனால், பின்னர் அறிவினால் ஆராய்ந்து பார்த்துத் தவறு என்று தெரிந்துவிட்டால், அச்செயலைக் குழந்தை தவிர்த்துவிடும். தவறெனக் கண்ட பிறகும் தவிர்க்க இயலாவிடில், அது தீய பழக்கமாகும். ஒரு குறிப்பிட்ட செயலைக் கூர்ந்து நாம் சிந்தித்திருந்தால், அதைத்



Unit 7 Rev.indd 134 13-02-2020 20:30:33

தவிர்த்திருக்க முடியும் என்ற கருத்து எழுமானால், அப்படித் தவிர்த்துவிடும் செயலே நற்செயலாகும்.

### விரும்பி ஏற்ற செயல் (Voluntary Action)

பகுத்தறிவும் செயல்திறனுமுள்ள ஒருவன், தன் குறிக்கோளைச் சரியானது இது என ஆராய்ந்து, இன்னது இது என வரையறை செய்துகொண்டு, அதை அடைய விரும்பிச் சுதந்திரமாகச் செய்வது விரும்பி ஏற்ற செயலாகும்.

### செயற்தூண்டலும் உள்நோக்கமும் (Motive and Intention)

உளவியல் அறிஞர்களின் கூற்றுப்படி, நாம் ஒரு செயலைத் தொடங்கி முடிப்பதற்குக் காரணமாகப் பல காரணிகள் இயங்குகின்றன. அவற்றுள் செயற்தூண்டலும் உள்நோக்கமும் இரண்டு முதன்மைக்காரணிகள் ஆகும். இவை எத்தகைய இயல்புடையன? எவ்வாறு செயல்படுகின்றன? என்பதை விரிவாக அறியவேண்டும்.

### செயற்தூண்டல் - விளக்கம்

எந்த ஆற்றல் நம்மைச் செயலை நோக்கிக் குறிப்பிட்ட வழியில் செல்லுமாறு தூண்டுகின்றதோ, அதுவே செயற்தூண்டலாகும் (Motive). ஒரு செயலைத் தோற்றுவிக்கவும் நிறைவுசெய்யவும் உரிய காரணமாகச் செயற்தூண்டல் அமைகிறது.செயல்களின் தன்மை, செயல்கள் நிகழும் இடம், காலம், செயலாற்றுவோரின் இயல்பு போன்றவற்றிற்குத் தக்கவாறு பல வகைகளில் செயற்தூண்டல் அமையும்.

இன்ப துன்பங்களே செயலின் உள்நோக்கங்கள் என்று கொண்டால், துன்பமே செயலைத் தொடங்கி வைப்பதாகவும் (நாட்டு நலனுக்காகத் தன் உயிரைப் போர்வீரன் தியாகம் செய்தல்), இன்பமே செயலை முடித்து வைப்பதாகவும் (பொருள் தேடி வெளிநாடு சென்றவர் தாய்நாட்டுக்குத் திரும்புதல்) கொள்ளலாம். இதற்கு எதிர்மாறாகத் துன்பமே முடிவாகவும் இன்பமே தொடக்கமாகவும் அமைவதும் உண்டு.

### உள்நோக்கம் (Intention)

செயற்தூண்டலைவிட உள்நோக்கம் விரிந்த பொருளுடையது. அது ஒரு செயலைச் செய்பவரது உள்நோக்கத்தை அடைவதற்கான வழிவகைகளையும் குறிப்பதாகும். (எ.கா.) ஒரு மாணவன் நன்கு படிக்கிறான் என்றால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. நிறைய மதிப்பெண்கள் பெறவேண்டும், முதல்வகுப்பில் தேர்ச்சி பெறவேண்டும், பெற்றோரிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் நல்ல பெயர் எடுக்கவேண்டும், நல்ல வேலையில் சேரவேண்டும், நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும், நன்றாக வாழவேண்டும் போன்ற பல வகையான இலக்குகள் அவனது கடின உழைப்பிற்குக்காரணமாக அமைகின்றன.இவை யாவுமே அவனது செயலின் நோக்கங்களாகும்.

பொதுவாகக் கூறுமிடத்து, உள்நோக்கம் என்பதைக் குறிக்கோள் எனலாம். ஒரு செயலின் முடிவுக்கான காரணம் என்றும் கூறலாம். இது பல்வேறு கூறுகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

செ யற்தூண்டலைப் போன்றே உள்நோக்கமும் இட ம், காலம், செயல் நிகழும் சூழ்நிலை, செயல் செய்பவரது மனநிலை போன்றவற்றிற்குத் தக்கவாறு அமைகிறது. இவற்றின் அடிப்படையில் உடனடி நோக்கம், நீண்டகால நோக்கம், குறிப்பான நோக்கம் எனப் பகுக்கலாம்.

#### 1. உடனடி நோக்கம்

உடனடி நோக்கம் என்பது, ஒரு செயலின் மூலம் அடையக்கூடிய உடனடிக் குறிக்கோளாகும். கல்லூரியில் சேர ஒரு மாணவன் விண்ணப்பப் படிவம் வாங்குதல் என்ற செயலின் உடனடிக் குறிக்கோள், உடனே அவன் கல்லூரியில் சேர்ந்துவிடவேண்டும் என்பதாகும்.

#### 2. நீண்டகால நோக்கம்

ஒரு மாணவன், நல்ல வளமான எதிர்காலத்தைத் தனக்கு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புவது, நீண்ட காலப் பயன் தரும் ஒரு நோக்கமாகும்.



Unit 7 Rev.indd 135 13-02-2020 20:30:33

### 3. வெளிப்படையான நோக்கம்

பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டம், குழந்தைகளின் உடல்நலனைப் பேணும் என்பது வெளிப்படையான நோக்கமாகும்.

### 4. குறிப்பான நோக்கம்

பள்ளிக் குழந்தைகளின் இடைநிற்றலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டம் தவிர்க்கும் என்பது குறிப்பான நோக்கமாகும்.

## அறப்பண்புகளின் வளர்ச்சி

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதன் தன்னைப் பண்பட்டவனாக மாற்றிக்கொள்வதை அறப்பண்பின் வளர்ச்சியாகக் கருதலாம். இத்தகைய தனிமனித அறவளர்ச்சி, அவனுடைய மனவளர்ச்சியைச் சார்ந்தே அமைகிறது. இத்தனிமனித அறவளர்ச்சியைப் பின்வரும் மூன்று நிலைகளில் விளக்கலாம்.

1. மரபொழுக்க நிலை,
2. இயல்பூக்க நிலை
3. மனச்சான்று நிலை

## மரபொழுக்க நிலை (Customary Morality)

ஒரு செயல் அல்லது குறிப்பிட்ட சில செயல்களைத் தலைமுறைகள்தோறும் மனிதன் பின்பற்றிவரும் நிலையே, மரபொழுக்க நிலையாகும். அறவியல் கொள்கைகள், பெரும்பாலும் மரபொழுக்கநிலையின் விளைவாகவே தோன்றியுள்ளன. நெடுங்காலமாகச் சமூகத்தில் நிலைப்பட்டுள்ள முன்னோர்களின் அறச்செயல்களைக் 'குடும்ப மனிதன்' வாழையடி வாழையாகப் பின்பற்றி வருகிறான். அவனுக்கும் அவனது வழித்தோன்றல்களுக்கும் அச்செயல்கள் நன்மை அளித்ததே, இதற்குக் காரணமாகும்.

### மரபொழுக்கநிலை: நிறைகளும் குறைகளும்

#### நிறைகள்

1. தனிமனிதன் தன்னை அறம் சார்ந்தவனாக மாற்றிக்கொள்வதோடு மட்டுமல்லாமல், தன்னைச் சார்ந்த அனைவரையும் அறம் சார்ந்தவனாக உயர்த்திவிடுகின்றான்.
2. சமுதாயத்துடன் இணைந்து செயல்படுதல், தொண்டு செய்தல் முதலான நற்பண்புகளை மனிதர்களிடம் மரபொழுக்கநிலை வளர்க்கின்றது.
3. மனிதர்களுக்கு இடையே பொதுவான மரபுகளே பின்பற்றப்படுவதால், அவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் களையப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.
4. தனிமனிதன் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு செயல் சரியா? தவறா? என்று சிந்தித்துச் செயல்படாது, தன் குழுவின் மரபுகளை எளிமையாகக் கடைப்பிடிக்க, மரபொழுக்கநிலை உதவுகிறது.
5. மரபொழுக்கநிலையைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதன் வாயிலாக, மனிதர்கள் அனைவரும் ஒன்றுபடும் உயரிய சமூகம் உருவாக வாய்ப்புள்ளது.

#### குறைகள்

மரபொழுக்கநிலையில் பல நன்மைகள் இருப்பினும் சில குறைகளும் உள்ளன.

1. தனிமனிதச் சிந்தனைகளும் செயல்பாடுகளும் மறுக்கப்படுகின்றன.
2. தொன்றுதொட்டுவரும் மூடப்பழக்க வழக்கங்களை இன்றும் பின்பற்றும் சூழல் உருவாகிறது.
3. சமுதாய நன்மைகளுக்காகத் தனிமனித உரிமைகள் துறக்கப்படுகின்றன.
4. மூத்தோரின் விழுமிய மரபுகளையே பின்பற்றும் சமுதாயத்தில், புதியதாகத் தோன்றும் சிந்தனைகள் தடை செய்யப்படுகின்றன.

## இயல்பூக்க நிலை (Instinctive Morality)

புறத்தூண்டுதலின்றித் தன்னியல்பாக எழக்கூடிய உணர்ச்சி, 'இயல்பூக்க நிலை' எனப்படுகிறது. (எ.கா.) பசி, காமம், பயம், தாகம், இரக்கம். இத்தகைய உணர்ச்சிகளின் இயல்பூக்கநிலையில் பகுத்தறிவு செயல்படுவதில்லை. இயல்பூக்க உணர்ச்சிகள், மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாகவே அமைந்துள்ளன. ஆனால், மனித உணர்ச்சிகளையும் விலங்குணர்ச்சிகளையும் பிரித்தறியத் தெரியவேண்டும். ஏனெனில்,



Unit 7 Rev.indd 136 13-02-2020 20:30:33

விலங்கினங்களின் இயல்பூக்கநிலை, தேவையை நிறைவு செய்வதாக மட்டுமே உள்ளது. மனிதனிடமோ தேவையின் நிறைவுக்குப் பின்னாலும், நன்மை மற்றும் தீமை பற்றிய போராட்டமாகத் தொடர்கிறது.

## மனச்சான்று நிலை (Reflective Morality)

மனச்சான்று நிலை என்பது, 'தன்னுண்மையறிவு' எனப்படுகிறது. இது செயலின் விளைவைக் கருதி, அச்செயல் சரியானதா? தவறானதா? எனத் தீர்மானிக்கும் அறிவு நிலைப்பாட்டின் உயிராற்றலாகும். ஒவ்வொரு மனிதனும் செயல்களைச் செய்யும்பொழுது, தன்னுண்மை அறிவு சரியா? தவறா? என்றாராய்ந்து கூறிக்கொண்டேயுள்ளது. இதனையே மனச்சான்றுநிலை என்கிறோம். ஒரு மனிதன் தான் செய்த செயலுக்குப் பின்னர் மனம் வருந்துவது மனச்சான்றின் வெளிப்பாடேயாகும். சமயம், அரசு, சட்டம் முதலான நிறுவனங்கள், தனிமனிதன்மீது செலுத்தும் ஆதிக்கம் காரணமாக மன அமைதி குலைகிறது. மேலும் பஞ்சம், பசி, கொடிய நோயின் தாக்குதல்கள், சமயச் சச்சரவு, போர், சுரண்டல் ஆகியவற்றின் காரணமாகத் தனிமனிதன் பாதிக்கப்படும்போதும், மரபொழுக்கநிலை ஏற்புடையதாக இருப்பதில்லை. எனவே மனிதன், தன் மனச்சான்றின் அடிப்படையில் செயல்படுவது தவிர்க்க முடியாததாகும்.

### நிறைகள்

1. மனச்சான்றின் வழிபட்ட தனிமனிதன் முடிவுகளை எடுக்கும்போது, மூடநம்பிக்கை களிலிருந்து அவன் விடுபடுகிறான். அறத்தெளிவும் அவனுக்கு ஏற்படுகிறது.
2. மனச்சான்றைக் குற்றவாளியின் கருத்திலெடுத்து அவன் செய்த குற்றங்களுக்குத் தண்டனை வ ழங்கப்படும்போது, சூழல்களைக் கருதித் த ண்டனை குறைக்கப்படலாம் அல்லது குற்றவாளி விடுவிக்கப்படலாம்.
3. மனிதனிடத்தில் மனச்சான்று உள்ளபோது, அறச்சிந்தனைகள் உருவாகி அறவளர்ச்சிக்கு வித்திடுகின்றன.

### குறைகள்

ம னச்சான்றுக்கு உட்பட்டுத் தன் செ யல்களைத் தீர்மானிக்கும்போது, சுய இரக்க உணர்வு மிகுதியால் (Self-Sympathy), தா ன் செய்தது தனக்குச் சரியே என்ற கண்மூடித்தனமான முடிவுக்கு மனிதன் வருவதற்கும் வாய்ப்புள்ளது.

மரபொழுக்கநிலை, இயல்பூக்கநிலை, மனச்சான்றுநிலை ஆகிய மூன்றும் பல்வேறு சூழல்களில், ஒன்றை ஒன்று சார்ந்தே செயல்பட்டு வருகின்றன. வேறு சில சூழல்களில் ஒன்றை மற்றொன்று விலக்கவும் செய்கின்றன. எனவே, இம்மூன்று நிலைகளிலும் முரண்பாடுகள், சார்புகள் ஆகியவை காணப்படுகின்றன.

ஒரே மனிதனிடத்தில்கூட இம்மூன்று அறவளர்ச்சி நிலைகளும், அவன் சூழலுக்குத் தகுந்தாற்போல் மாறிமாறிச் சுழல்வதைக் காணலாம். ஒரு மனிதன் கோபப்பட்டு அறிவிழக்கும்பொழுது, இயல்பூக்கநிலையில் அவன் செயல்படுகின்றான். தேர்தலில் அவன் வாக்களிக்கும்போது, மனச்சான்றின்படி அவன் செயல்படுகிறான். சமயநெறியின் அடிப்படையில் அவன், மரபொழுக்க நிலையிலும் செயல்படுகிறான். எனவே, அறப்பண்புகளின் வளர்ச்சி என்பதை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் வைத்துக் கருதாமல், மனநிலைகளில் ஏற்படும் மாற்றத்தின் வளர்ச்சி எனக்கொள்வதே பொருத்தமுடையதாகும்.

### நிறைவுரை

தனிமனித வாழ்க்கை மட்டுமின்றிச் சமூக வாழ்க்கையையும் அறவியல் வரையறை செய்துள்ளது என்பதையும், அவரவருக்கு உரிய கடமைகளைச் சமூகவிதிகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் கட்டுப்பட்டுச் செயல்படுத்துகிறார்களா என்பதையும் அறவியல் ஆராய்கிறது. பகுத்தறிவின் மூலம் மனிதன் தனக்கும் சமூகத்திற்கும் நன்மை தரக்கூடிய செயல்களைச் செய்யவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மதிப்பீடு

PZZH92

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'Ethos' என்ற கிரேக்கச் சொல்லின் பொருள்
அ) வழக்கம்　ஆ) மரபு　இ) இயல்பு　ஈ) தன்மை

2. கீழ்க்காண்பனவற்றுள் 'உயர்நிலை' அறிவியல் பிரிவைச் சாராததனைத் தேர்ந்தெடுக்க.
அ) அழகியல்　ஆ) அளவையியல்　இ) உளவியல்　ஈ) அறவியல்

3. ஆராய்ச்சியின் அடிப்படையில் தீர்வு காண்பது என்பது, ---- அறிவியல்
அ) உயர்நிலை　ஆ) அழகியல்　இ) நேர்நிலை　ஈ) சமூகவியல்

4. கீழ்க்காண்பனவற்றுள் சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்க.
(1) சமூகவியல் என்பது, சமூகத்தைப் பற்றிய ஆய்வு
(2) அறவியல் என்பது, மனித மனத்தைப் பற்றிய ஆய்வு
(3) மானுடவியல் என்பது, மனித இனத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றிய ஆய்வு
(4) உளவியல் என்பது, மனித நடத்தையின் தரத்தைப் பற்றிய ஆய்வு
அ) 1, 2 சரியானவை　ஆ) 1, 3 சரியானவை
இ) 1, 4 சரியானவை　ஈ) 2, 4 சரியானவை

5. ஒரு செயலைத் திரும்ப திரும்பச் செய்யும்போது, அது -----.
அ) வழக்கச் செயலாகிறது.　ஆ) பழக்கச் செயலாகிறது.
இ) அனிச்சைச் செயலாகிறது.　ஈ) மரபுச் செயலாகிறது.

6. கீழ்க்காண்பனவற்றுள் தவறான கூற்றைச் சுட்டிக்காட்டுக.
அ) நல்லொழுக்க நற்பண்பு என்பது, உயர்நிலை அறிவுடைமை என்று கூறியவர், சாக்ரடீஸ்.
ஆ) நல்லொழுக்க நற்பண்பு என்பது, நல்ல பழக்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகுதல் என்று கூறியவர், அரிஸ்டாட்டில்.
இ) நல்லொழுக்க நற்பண்பை ஆய்வு செய்தவர், பில்லிகிரகாம்.
ஈ) பிறர் உரிமைகளில் தலையிடுவது சட்டப்படி குற்றம் என்று கூறியவர், இமானுவேல் கான்ட்.

7. தவறான கூற்றைச் சுட்டுக .
அ) மரபொழுக்கநிலை என்பது, குறிப்பிட்ட சில செயல்களைத் தலைமுறைகள்தோறும் பின்பற்றுதல்.
ஆ) இயல்பூக்கநிலை என்பது, புறத்தூண்டுதலின்றித் தன்னியல்பாக எழக்கூடிய உணர்ச்சி.
இ) மனச்சான்று நிலை என்பது, தன்னுண்மை அறிவு.
ஈ) பற்று உறுதி சுதந்திரம் என்பது, மனிதன் தன் விருப்பத்தைக் கட்டுப்பாட்டுடன் இயக்குதல்.

8. மரபொழுக்கநிலைக்குப் பொருத்தமில்லாத கூற்றைச் சுட்டுக.
அ) தனிமனிதச் சிந்தனைகளும் செயல்பாடுகளும் ஏற்கப்படுகின்றன.
ஆ) தனிமனிதன், தன்னைச் சார்ந்தவரையும் அறம் சார்ந்தவராக உருவாக்குகிறார்.

இ) பொதுவான மரபுகள் பின்பற்றப்படுவதால், மனிதர்களிடையே உள்ள வேறுபாடுகள் களையப்படுகின்றன.

ஈ) மனிதர் அனைவரும் ஒன்றுபடும்போது, உயரிய சமூகம் உருவாகிறது.

9. அறவியலை அடிப்படையாகக் கொண்டதே தத்துவவியல் என்று கருதியவர் ----

அ) ஹெகல் ஆ) வில்லியம் ஜேம்ஸ் இ) கிரீன் ஈ) ராஸ்டல்

10. ஒரு சமூகத்தின் நல்வாழ்வுக்கும் பொது அமைதிக்கும் குறியீடாக அமைவது ----------.

அ) குடும்பம் ஆ) கல்லூரி இ) பள்ளி ஈ) பல்கலைக்கழகம்

## குறுவினா

1. அறவியல் – வரையறு.
2. மானுட அறம் பற்றி ஔவையார் யாது கூறுகிறார் ?
3. மனித வாழ்வின் உறுதிப் பொருள்களாகக் குறிப்பிடப்படுவன யாவை ?
4. நடத்தை என்றால் என்ன ?
5. அரிஸ்டாட்டில் அறவியலை எவ்வாறு வரையறை செய்கிறார் ?
6. உயர்நிலை அறிவியலுக்கு எடுத்துக்காட்டாக எவற்றைக் கூறலாம் ?
7. நேர்நிலை அறிவியல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.
8. அறச்செயல்கள் – வரையறு.

## சிறுவினா

1. குடும்பம் – வரையறு.
2. தனிமனித அறவளர்ச்சியில், மரபொழுக்கநிலையின் பங்கு யாது?
3. திருக்குறள் குறிப்பிடும் குடிமைப்பண்புகளைப் பட்டியலிடுக.
4. ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்யும்போது, அது பழக்கமாக மாறுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு தருக.
5. அறவியலுக்கும் மானுடவியலுக்கும் உள்ள தொடர்பை விளக்குக.
6. தத்துவவியலார் குறிப்பிடும் ஒழுக்கத்தின் மூவகை அடிப்படை விதிகள் யாவை?
7. கடவுளையும் மனிதனையும் குறித்த கருத்துகளின் அடிப்படையில், உருவான மூவகைக் கொள்கைகள் யாவை ?
8. அறஞ்சாராச் செயல் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

## நெடுவினா

1. 'அறவியலும் ஓர் உயர்நிலை அறிவியலே ' - இக்கூற்றை நிறுவுக.
2. சமூக அறப்பயிற்சி மையமெனக் கல்வி நிறுவனத்தை ஏன் கூறுகின்றோம்? அந்நிறுவனத்தினால் விளையும் பயன்களைப் பட்டியலிடுக.
3. குடிமைப்பண்பைப் பெறத் தகுதியுடையவர்கள் யார்? அவர்களுக்குரிய சிறந்த குடிமைப்பண்புகளைக் குறிப்பிடுக.
4. மனிதனின் சுதந்தர மனநிலைக்கும் தீர்மானக் கொள்கைக்கும் உள்ள தொடர்பை விவரித்து எழுதுக.
5. ஒரு செயலைச் செய்துமுடிப்பதில், 'உள்நோக்கம் ' (INTENTION) எவ்வாறு உதவுகிறது? அதன் நான்வகைப் பகுப்புகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
6. தனிமனித அறவளர்ச்சி நிலையில் மனச்சான்று பெறுமிடம் யாது? அதன் நிறை குறைகளை விவரிக்க.